23rd November 1963]

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Particulars of staff employed in this State under the National Malaria Eradication Programme are as follows:—

Gazetted	31
Non-Gazetted including Mazdoors	7,912

திரு. மு. சண்முகம்: சார், தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் செலவிடப்படும் தொகை எவ்வளவு? நம் அரசாங்கத்தில் இருந்து எவ்வளவு செலவிடப்படுகிறது? மத்திய அராங்கத்தில் இருந்து எவ்வளவு கொடுக்கப்படுகிறது? அமெரிக்க அரசாங்கத்தில் இருந்து கொடுக்கப்படும் தொகை எவ்வளவு என அறிய விரும்புகிறேன்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஸார்; ஏற்கனவே 1954-55-ல் ஒதுக்கப்பட்ட தொகை . . .

MR. DEPUTY SPEAKER: Questions 487 and 488 may also be answered now as they relate to the same subject.

* 487 கேள்வி.—திரு. எஸ். ராமசாமி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அமெரிக்க சர்க்காரால் மலேரியா ஒழிப்பிற்காக கொடுக்கப்பட்ட தொகையில் நம் மாநிலத்திற்கு கிடைத்த பங்குத் தொகை எவ்வளவு?

(இ) 1962-63-ல் இம் மாநிலத்தில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) 1962-63-ல் U.S.A.I.D. (T.C.M.) -ல் இருந்து வண்டிகள், மருந்துகள், மற்ற சாதனங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றை இலவசமாகப் பெற்ற வகையில் நமது மாநிலத்திற்குக் கிடைத்த உதவியின் தோராய மதிப்பு ரூ. 16.53 லட்சமாகும்.

(இ) இத்திட்டத்திற்காக 1962-63-ல் செய்த தோராய செலவு ரூ. 105.03 லட்சம் ஆகும்.

* 488 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the pupils of an elementary school at Tiruchirappalli were affected by taking anti-malaria pills distributed to them under the National Malaria Eradication Programme in June 1963; and

(b) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) சபையில் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

---

[a] 778-ம் பக்கத்தில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[23rd November 1963

திரு. செ. மாதவன் : ஸார், அமைச்சர் அவர்கள் தந்து இருக்கிற இந்த அறிக்கையில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட மலேரியா தடுப்பு மாத்திரையினால் தீமை விளைந்தது என்றும் மற்ற வேறொரு மாத்திரை கொடுக்க உத்திரவு இட்டு இருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. முதல் மாத்திரையின் தரம் என்ன? அது எந்த நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டது? அதனால் தீமை விளைகிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு எப்போது தெரிய வந்தது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸார், மலேரியாவின் தடுப்பு மாத்திரைகள் எல்லாமே குவினையின் பிராடக்ஸ்கள் தான் முதலில் கொடுக்கப்பட்ட 'காமோகுவின்' மாத்திரை சிலருடைய சரீரத்திற்கு ஒத்துக்கொள்ளாமல் ஜுரம், வாந்தி உண்டுபண்ணியதால், அவர்களுக்கு அந்த மாத்திரைக்குப் பதிலாக 'குளோரோகுவின்' என்ற மாத்திரையைக் கொடுக்கும்படி உத்தரவு இடப்பட்டது. மாத்திரையில் ஒன்றும் கோளாறு இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : ஸார், இந்த மலேரியா ஒழிப்புத் திட்டத்தை இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு நடத்துவதாக உத்தேசம்? இப்போது இந்தத் திட்டத்தை எந்தெந்த முறைகளிலே கையாண்டு வருகிறார்கள்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மலேரியா ஒழிப்புத் திட்டம் அநேகமாக கடைசி கட்டத்தில் தான் இருக்கிறது. 1964-ம் ஆண்டுக்குள் முடிந்து விடும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், National Malaria Eradication Programme என்ற இந்த மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பணியாற்றுகின்ற ஊழியர்கள் 10 மைல், 20 மைல் நடந்து போக வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்குப் பயணப்படியும் கொடுக்கப்படுவதில்லை. வொர்க்கர்ஸ் அலவன்ஸும் கொடுக்கப்படுவதில்லை. அவர்களுடைய வேலையும் இன்னும் நிரந்தரம் ஆக்கப்படவில்லை. அவர்களுக்கு எப்போது விமோசனம் இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸார், இந்த மலேரியா ஒழிப்புத் திட்டத்தின்கீழ் வேலை செய்யும் ஊழியர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்படும் சம்பளத்தை விட அதிகமாகக் கொடுக்க முடியாது. அவர்களுடைய உத்தியோகத்தை நிரந்தரமாக்கும் விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

சிறு தொழில்கள் (ராமநாதபுரம்)

***489 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறிய கைத்தொழில்கள் ஆரம்பிப்பதற்காக (Small-Scale Industries) கிழக்கு இராமநாதபுரம் வட்டத்தில் சர்வே செய்யப்பட்டதா?